# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 150/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| Defence | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலுபிரசாத் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜெயராமன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

முதல் விசாரணை

நான் சங்கர் நகரில் வசித்து வருகிறேன். டியுசன் சென்டர் வைத்துள்ளேன். 31.08.2024 ம் தேதி எனது வண்டி TN 45 R 6258 என்ற இரவு 10.00 மணிக்கு பூட்டிவிட்டு வீட்டின் காம்பொண்டில் வைத்துவிட்டு தூங்க சென்றுவிட்டேன். 01.09.2024 ம் தேதி காலை 04.00 மணிக்கு வெளியே வந்து பார்த்தபோது காம்பொண்டு சுவர் கேட்டு பூட்டு உடைக்கப்பட்டு பூட்டு சைடில் கிடந்தது வண்டியை காணவில்லை. அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுான் அந்த புகார் அ.,சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 20.09.2024 ம் தேதி எனது வானத்தை போலிசார் கண்டுபிடித்தாக போலிசார் தகவல் சொன்னார்கள். பின்பு காவல் நிலையம் சென்று முதல் தகவல் அறிக்கை வாங்கிக்கொண்டேன். பின்பு எனது வாகனத்தை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில பெற்றுக்கொள்ள உள்ளேன். TN 45 R 6258 வண்டி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

1,3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 31.08.2024 ம் தேதி காம்பொண்டு கேட்டை பூட்டிவிட்டு உள்ளே சென்றிர்கள் என்றால் ஆம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது காம்பவுண்டு கேட்டு உடைக்கப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் வண்டி காணவில்லை னது என்று தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆம். புகாரில் என்ன விவரம் எழுத வேண்டும் என்று போலிசார் சொன்னார்களா என்றால் நானாக எழுதி கொடுத்தேன். 20.09.2024 ம் தேதி உங்கள் வண்டி கிடைத்ததாக கூறியுள்ள நிலையில் யாரிடம் இருந்து கிடைத்தாக சொல்லவில்லை என்றால் ஆம்.காவல் நிலையத்தில் வாகனத்தை எப்போது பார்த்திர்கள் என்றால் காலை 10.00 மணிக்கு பார்த்தேன்.

2. 20.09.2024 ம் தேதி வண்டி கிடைத்ததாக சொல்லியுள்ள நிலையில் ஏன் வாகனத்தை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் பெயர் மாற்றம் சம்பந்தமாக காலதாமதம் ஆனது. இன்று வரை பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் வண்டியை எடுத்தபின்பு தான் செய்ய வேண்டும். புகாரில் வண்டி திருடுபோனதாக குறிப்பிடவில்லை என்றால் ஆம் காணவில்லை என்று தான்கூறியுள்ளேன். கீர்த்தான உங்கள் மனைவி என்றால் ஆம். ஜெயராமன், சுசிலா எனது அப்பா அம்மா ஆவார். சாந்தி எனது பக்கத்து வீட்டுக்காரர். நீங்கள் சொன்னபடி சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. புகாருக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் தெரியவில்லை. 20.09.2024 ம் தேதி உங்களது வானத்தை பார்த்தபோது எதிரிகளை பார்த்திர்களா என்றால் நான் பார்க்கவில்லை வண்டி சைடில் இந்தது வண்டியை பார்த்தேன். எதிரிகள் யார் எங்கு கைது செய்தார்கள் என்பது பற்றி கேட்கவில்லை என்றால் ஆம்.

3. 4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 150/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கீர்த்தனா | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வேலுபிரசாத் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

முதல் விசாரணை

நான் சங்கர் நகரில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். 31.08.2024 ம் தேதி இரவு எனது கணவர் வீட்டின் வெளியே வண்டியை நிறுத்திவிட்டு வந்தார். துாங்கிவிட்டோம் மறுநாள் காலை 04.00 மணிக்கு பார்த்போது வண்டியை காணவில்லை. கேட் திறந்து பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் தேடி பார்த்துகிடைக்காததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் வந்து விசாரித்தார்கள். 20 நாள் கழித்து வண்டி கிடைத்துவிட்டதாக போலிசார் சொன்னார்கள். காவல் நிலையம் சென்று எனது கணவர் பார்த்தார். இதுசம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

**1,3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 உங்களது கணவர் என்றால் ஆம். போலிசார் விசாரணையில் எனது கணவர் அவரது வாகனத்தை எங்கள் வீட்டின் காம்பவுண்டுக்கு சாவியுடன் நிறுத்திவிடடு கேட்டை மட்டும் பூட்டிவிட்டு வந்து துாங்கிவிட்டதாக சொல்லியுள்ளிர்கள் என்றால் ஆம். உங்கள் கணவர் வாகனத்தை காம்பொண்டுக்குள் நிறுத்தியபோது பார்க்கவில்லை

என்றால் ஆம். உங்கள் கணவர் சொல்லி தான் வாகனம் காணாமல் போனது தெரியும் என்றால் ஆம். கணவர் சொல்லி தான் வாகனம் காணாமல் போனது தெரியும் என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆம். வண்டி காணாமல் போனது பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆம். அ.சா.1 ஆனதுஉங்களது கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாகவும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்கவும் பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொன்னபடி சொன்ன நேரத்தில் உங்களை போலிசார் விசாரிக்கவும் இல்லை, காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டிர்கள் என்றாலும் சரியல்ல.

3. 4ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.150 /2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மனோகரன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராமசாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

முதல் விசாரணை

நான் சங்கர் நகரில் வசித்து வருகிறேன் வேலுபிரசாத் வீட்டின் பக்கத்து வீட்டில் உள்ளேன். நான் ரியல்எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். 01.09.2024 ம் தேதி காலை 06.00 மணிக்கு பக்கத்து விட்டுக்காரர் வேலுபிரசாத் பைக் திருடுபோனதாக கூறினார். அவர் புகார் கொடுத்த பின்னிட்டு போலிசார் வந்து விசாரித்தார்கள். வீட்டு பக்கத்தில் உள்ள வீடுகளை அடையாளம் கேட்டார்கள் சொன்னேன். படம் வரைந்தார்கள் . அடையாளம் சொன்னதற்காக கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் குருசாமி என்ற எனது நண்பரான கோவில் பூசாமி என்பவரும் கையெழுத்து செய்தார். அங்கு பூப்பரிப்பதற்காக வந்திருந்தார். இது சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எத்தனை வருடமாக ரியல்எஸ்டேட் செய்கிறர்கள் என்றால் 5

வருடம். சங்கர் நகரில் வேலுபிரசாத் வீட்டிற்கு பக்கத்தில் 24 வருடமாக குடியிருந்து வருகிறேன். வேலுபிரசாத் என்பவரை சின்ன வயதில் இருந்தே தெரியும் என்றால் சரிதான். நீங்களும், குருசாமியும் எதற்காக நடந்து சென்றிர்கள் என்றால் என்னுடைய வீடு, மற்றும் குருசாமி பூப்பறிக்கவும் நடந்து சென்றோம். பூப்பறிக்க நடந்து சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆம். வேலுபிரசாத் வாகனம் காணாமல் போனது அவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

2. வண்டி காணாமல் போனது பற்றி வேறு விவரம் தெரியாது என்றால் ஆம் . யார் என்பது பற்றி தெரியாது. அவர் என்ன வண்டி வைத்திருந்தார் என்று தெரியாது என்றால் Yamaha வாகனம். நீங்கள் சொன்னபடி சொன்ன நேரத்தில் போலிசார் விசாரிக்கவிலலை என்றால் சரியல்ல. அ.சா.1 உங்கள் பக்கத்து' வீட்டுக்கார் அவர் சின்ன வயதில் இருந்து தெரியும் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல். போலிசார் விசாரித்தபோ நேரம் என்ன என்றால் மதியம் 2.30– 3.00 மணிக்குள். என்ன விசாரித்தார்கள் என்றால் வண்டி திருடுபோனது பற்றி விசாரித்தார்கள். பக்கத்து வீடு யார் யார் என்றும் விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

3. 4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.